www.Padasalai.Net www.TrbTnpsc.com

# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –6

## பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு – ஏப்ரல் 2023

## மொழிப்பாடம் – தமிழ்

## விடைக்குறிப்புகள்

மொத்த மதிப்பெண்கள்: 100

### பகுதி –I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக. 15 x 1 = 15

| வினா எண் | | விடைக்குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | ஈ) | சருகும் சண்டும் | 1 |
| 2 | ஆ) | அங்கு வறுமை இல்லாததால் | 1 |
| 3 | இ) | உழவு, ஏர், மண், மாடு | 1 |
| 4 | ஆ) | கருணையன், எலிசபெத்துக்காக | 1 |
| 5 | ஈ) | இலா | 1 |
| 6 | அ) | அருமை + துணை | 1 |
| 7 | ஆ) | உருபும் பயனும் உடன்தொக்க தொகை | 1 |
| 8 | ஆ) | அதியன்; பெருஞ்சாத்தன் | 1 |
| 9 | அ) | நான்கு, ஐந்து – ச, ரு | 1 |
| 10 | இ) | மரபு வழுவமைதி | 1 |
| 11 | ஆ) | வினையெச்சத்தொடர் | 1 |
| 12 | ஈ) | சிலப்பதிகாரம் | 1 |
| 13 | அ) | பகர்வனர்; பட்டினும் | 1 |
| 14 | ஆ) | நெசவாளர் | 1 |
| 15 | இ) | அகிலும்; சந்தனமும் | 1 |

### பகுதி –II

பிரிவு –1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. 4 x 2 = 8

21–ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.

| | | |
|---|---|---|
| 16 | வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி | 2 |
| 17 | அ) பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தியவர் யார்?<br>ஆ) தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது எது?<br>(பொருத்தமான வினா எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 1<br>1 |
| 18 | ❖ சதம் என்றால் நூறு<br>❖ ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தல் – சதாவதானம் | 1<br>1 |
| 19 | ❖ அரசர்கள் தங்கள் வரலாறும் சிறப்பும் காலங் கடந்து நிலைத்து நிற்க கல்லில் மெய்க்கீர்த்தி எழுதினார்கள் | 2 |
| 20 | ❖ அறம் கூறும் மன்றங்கள்<br>❖ அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன. | 2 |
| 21 | செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்<br>தியற்கை அறிந்து செயல் | 2 |

பிரிவு–2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக. 5 x 2 = 10

| | | |
|---|---|---|
| 22 | அ) உதகை ஆ) நெல்லை இ) சைதை ஈ) குடந்தை | 2 |
| 23 | அ) சோற்றுக்கு ஒரு சோறு பதம்<br>ஆ) மீறினால் அமிர்தமும் நஞ்சு | 1<br>1 |



Scanned with CamScanner

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 24 | ஒலித்து = ஒலி+த்+த்+உ<br>ஒலி– பகுதி<br>த் – சந்தி<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி | 1<br>1 |
| 25 | அ) காப்புரிமை<br>ஆ) புயல் | 1<br>1 |
| | செவிமாற்றுத்திறனாளர்களுக்கான வினா<br>தேன்மழை, பொன் விலங்கு, மணிமேகலை, வான்மழை,<br>பொன்செய், பூவிலங்கு, பொன்மணி, பொன்விளக்கு, பூமழை<br>(எவையேனும் நான்கு எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 2 |
| 26 | அ) அன்புச் செல்வன்– இருபெயரொட்டுப் பண்புத்தொகை<br>ஆ) தொடுதிரை– வினைத்தொகை | 1<br>1 |
| 27 | அ) மனக்கோட்டை– படிக்காமல் தேர்ச்சி பெறலாம் என மனக்கோட்டை கட்டக் கூடாது.<br>ஆ) கண்ணும் கருத்தும்– பெற்றோர் குழந்தைகளைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்தனர்.<br>(பொருத்தமாக எழுதி இருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 1<br>1 |
| 28 | வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று வரும். இரண்டு அடிகளைக் கொண்டது குறள் வெண்பா<br>எகா: ஏதேனும் ஒரு குறள் | 1<br>1 |

## பகுதி– III

### பிரிவு–1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக . 2 x 3 = 6

| | | |
|---|---|---|
| 29 | போர் அறம், வணிக அறம், அரசியல் அறம், கொடை அறம், உதவும் அறம், உண்மை பேசும் அறம் இன்றைக்கும் தேவை.<br>(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்) | 3 |
| 30 | அ) போலச்செய்தல்<br>ஆ) புரவி ஆட்டம், புரவி நாட்டியம்<br>இ) மராட்டியர் | 1<br>1<br>1 |
| 31 | ❖ பொருத்தமான உரையாடலாக இருந்தால் முழுமதிப்பெண் வழங்கலாம் | 3 |

### பிரிவு–2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. 2 x 3 = 6

34–ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.

| | | |
|---|---|---|
| 32 | இடம்:– சித்தாளு – நாகூர் ரூமியின் கவிதை<br>பொருள்:– சித்தாளு வேலை செய்யும் பெண்ணின் மனச்சுமைகளைச் செங்கற்களும் அறியாது | 1<br>2 |
| 33 | (see table below) | 3 |

| | தமிழ் | கடல் |
|---|---|---|
| 1 | முத்தமிழ் | முத்து |
| 2 | முச்சங்கம் | மூன்று சங்கு |
| 3 | ஐம்பெருங்காப்பியங்கள் | வணிகக்கப்பல்கள் |
| 4 | சங்கப்புலவர்கள் பாதுகாப்பு | சங்கினைக் காத்தல் |

34

அ)
அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று — 3

(அல்லது)

ஆ)
மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்பது அறிந்து ஏகுமென் சாலை! — 3



Scanned with CamScanner

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பிரிவு–3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. 2 x 3 = 6

| | | | | |
|---|---|---|---|---|
| 35 | மல்லிகைப்பூ | இருபெயரொட்டுப் பண்புத்தொகை | மல்லிகை ஆகிய பூ | 3 |
| | ஆடுமாடுகள் | உம்மைத்தொகை | ஆடுகளும் மாடுகளும் | |
| | தண்ணீர்த்தொட்டி | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை | தண்ணீரை உடைய தொட்டி | |
| | குடிநீர் | வினைத்தொகை | குடித்த / குடிக்கின்ற / குடிக்கும் நீர் | |
| | சுவர்க்கடிகாரம் | ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை | சுவரின் கண் உள்ள கடிகாரம் | |
| | மணிபார்த்தாள் | இரண்டாம் வேற்றுமைத் தொகை | மணியைப் பார்த்தாள் | |
| | (எவையேனும் மூன்று எழுதினால் முழுமதிப்பெண் வழங்கலாம்) | | | |

36 உவமை அணி பயின்று வந்துள்ளது

அணி :– உவமானம், உவமேயம், உவமஉருபு–வெளிப்படையாக வரும்

விளக்கம் : –உவமானம்:– வேலோடு நின்றான் இடுவென்றது

உவமேயம்:– கோலோடு நின்றான் இரவு

உவமஉருப :– போலும்

37

| ப எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | நாள்/தொறும் | நேர், நிரை | கூவிளம் |
| 2 | நா/டி | நேர்,நேர் | தேமா |
| 3 | முறை/செ ய்/ யா | நிரை,நேர்,நேர் | புளிமாங்காய் |
| 4 | மன்/னவ ன | நேர், நிரை | கூவிளம் |
| 5 | நாள்/தொ றும் | நேர், நிரை | கூவிளம் |
| 6 | நா/டு | நேர், நேர் | தேமா |
| 7 | கெடும் | நிரை | மலர் |

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது — 3

பகுதி– IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 5 x 5 = 25

38

அ) முல்லைப் பாட்டு – கார்காலச் செய்திகள்: — 5

திருமால், மாவலி மன்னனுக்கு நீர் வார்த்துத் தரும்பொழுது, மண்ணுக்கும், விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்தது போல மழைமேகம் உயர்ந்து நின்றது.

கடல்நீரைப் பருகி, மலையைச் சூழ்ந்து, பெருமழை பொழிகிறது.

முதிய பெண்கள் மிகுந்த காவலை உடைய ஊர்ப்பக்கம் சென்றனர்.

மாலை நேரத்தில் முல்லைப் பூக்களோடு நெல்லையும் தெய்வத்தின் முன் தூவினர்.

தெய்வத்தைத் தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.

ஓர் இடைமகள், பசியால் வாடிக்கொண்டிருந்த இளங்கன்றிடம் உன் தாய்மார் இப்போது வந்துவிடுவர், வருந்தாதே என்றாள்.

முதுபெண்கள், தலைவியிடம் நற்சொல்லை நாங்கள் கேட்டோம், உன் தலைவன் விரைந்து வந்துவிடுவான் என ஆற்றுப்படுத்தினர்.

(அல்லது)



Scanned with CamScanner

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

ஆ) <u>சிறந்த அமைச்சருக்குரிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்தும்:</u> 5

- தொழில் செய்வதற்குத் தேவையான கருவி, ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும்முறை ஆகியவற்றை அறிந்து அரிய செயல் செய்யும் அமைச்சரைப்போல் நாமும் செயல்பட வேண்டும்.
- மனவலிமை, குடிகளைக் காத்தல், ஆட்சிமுறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல், விடாமுயற்சி ஆகியன சிறப்பாக நமக்கும் அமைய வேண்டும்.
- இயற்கையான நுண்ணறிவும், நூலறிவும் உடைய நமக்கு முன் எந்த நுட்பமான சூழ்ச்சிகளும் நிற்க இயலாது.
- ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல்வழியாக அறிந்திருப்பினும், உலகியல் நடைமுறைகளை அறிந்து நாமும் செயல்பட வேண்டும்.

39 <u>உறவினருக்குக் கடிதம்</u>

அ)
- ❖ நாள், இடம் ½
- ❖ விளித்தல் ½
- ❖ கடிதச்செய்தி 2 ½
- ❖ இப்படிக்கு ½
- ❖ உறைமேல்முகவரி 1

என்ற அடிப்படையில் விடை இருத்தல் வேண்டும்

(அல்லது)

ஆ) <u>முறையீட்டு விண்ணப்பம்</u>
- ❖ அனுப்புநர் ½
- ❖ பெறுநர் ½
- ❖ விளித்தல், பொருள் ½
- ❖ கடிதச்செய்தி 2
- ❖ இப்படிக்கு ½
- ❖ நாள், இடம் ½
- ❖ உறைமேல்முகவரி ½

என்ற அடிப்படையில் விண்ணப்பம் இருத்தல் வேண்டும்.

40 காட்சிக்கு ஏற்ற பொருத்தமான கவிதை இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம். 5

41 படிவத்தில் அனைத்து விவரங்களும் சரியாக நிரப்பி இருந்தால் முழுமதிப்பெண் வழங்கலாம். 5

42 அ) 5

| | பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|---|
| 1 | நேரத்தைச் சரியாகக் கடைபிடிப்பேன் | அதிகாலையில் எழுவேன் |
| 2 | ஆசிரியர் பேச்சைக்கேட்பேன் | பெற்றோர் பேச்சைக்கேட்பேன் |
| 3 | பணிவுடன் நடந்து கொள்வேன் | பெரியவர்களிடம் பணிந்து நடந்து கொள்வேன் |
| 4 | நண்பர்களுடன் உரையாடுவேன் | உறவினர்களுடன் உரையாடுவேன் |
| 5 | நண்பர்களுக்கு உதவுவேன் | பெற்றோருக்கு உதவுவேன் |

(இதுபோல் பொருத்தமாக எழுதி இருந்தாலும் முழுமதிப்பெண் வழங்கலாம்)

(அல்லது)



Scanned with CamScanner

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| ஆ) | **மருதநில வளம் :** சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் தமிழ்நாட்டின் ஐவகை நிலப்பிரிவுகளுள், மருதநிலம் பயிரிடத் தகுதியான நிலமாக, விளைநிலங்களை மிகுதியாகப் பெற்ற பகுதியாக இருந்தது. ஒரு உழவனின் செழுமையானது சூரியஒளி, பருவமழை, மண்வளம் ஆகியவற்றைப் பொறுத்தே அமைந்திருந்தது. இயற்கையின் இந்தக்கூறுகளுள், சூரிய ஒளியானது தவிர்க்க முடியாததாகப் பண்டைத் தமிழரால் கருதப்பட்டது. | 5 |
| | குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான விடை<br>i. கோடை<br>ii. பனிப்பகுதியிலிருந்து வீசும் மிகவும் குளிர்ச்சியான காற்று<br>iii. குடக்கு<br>iv. வடக்கு<br>v. காற்றுவீசும் திசைகள் (பொருத்தமான தலைப்பாக இருக்கலாம்) | 5 |

## பகுதி– V

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3 x 8 = 24

| | | |
|---|---|---|
| 43 அ) | விருந்தோம்பல்<br>❖ வரவேற்றல்<br>❖ விருந்து உபசரித்தல்<br>❖ மகிழ்வுடன் உரையாடல்<br>❖ விடைபெறுதல்<br>(இதுபோன்ற பொருத்தமான கருத்துகளைக் கொண்டு பிழையில்லாமல் எழுதினால் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 8 |
| | (அல்லது) | |
| ஆ) | (அட்டவணை கீழே) | 8 |

| சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகள் | இக்கால வணிக வளாகங்கள் அங்காடிகள் |
|---|---|
| நறுமணப்பொருள்கள், வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி போன்றவற்றை வீதிகளில் வணிகம் செய்தனர். | நறுமணப் பொருள்கள் போன்றவை கடைகளில் மட்டுமே பெரும்பாலும் விற்கப்படுகின்றன. |
| பட்டு, பருத்திநூல், முடிகள் ஆகியவற்றினைக் கொண்டு நூற்கும் கைத்தொழில் வல்லுநர்களான நெசவாளர்களை நிரம்பக்கொண்டது மருவூர்ப்பாக்க வணிக வீதி. | இன்றைகுக் கைத்தறி ஆடைகளைவிட விசைத்தறி ஆடைகளே அதிகம் விற்கின்றன. வீதிக்கு வீதி பல நவீன ஆடையகங்களைக் காணமுடிகிறது. |
| முத்தும் மணியும் பொன்னும் அளக்க முடியாத அளவிற்கு மருவூர்ப்பாக்க வீதிகளில் குவிந்து கிடக்கின்றன. | குளிரூட்டப்பட்ட வணிக வளாகங்களில் பலவித அலங்காரங்களுடன் காட்சிப் படுத்தப்படுவதில் வெள்ளி, பொன், வைர நகைகள் முன் நிற்கின்றன. |
| எட்டு வகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்களும் இருந்தன. | எல்லாவிதப் பொருள்களையும் ஒரே இடத்தில் வாங்கும் பொருட்டு பல்பொருள் அங்காடிகள் உள்ளன. |



Scanned with CamScanner

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| | மருவூர்ப்பாக்க வீதிகளில் பொற்கொல்லர், இரத்தின வேலை, செய்பவர், தையற்காரர், தச்சர், தோல்பொருள் செய்பவர், பொம்மைகள் செய்பவர் என்ற பலரும் இருந்தனர். / இன்றைய வணிக வளாகங்களில் பல வகையான நவீன சாதனங்களை விற்பவர்கள், மற்றும் பழுது நீக்குபவர்கள், முகவர்கள் போன்றோர் உள்ளனர்.<br>( இதுபோல் இக்கால வணிக வளாகங்கள் நிலைபற்றி பொருத்தமாக எழுதினால் மதிப்பெண் வழங்கலாம். ) | |
| 44 அ) | <u>மேரியின் வாழ்க்கை</u><br>❖ முன்னுரை<br>❖ மேரியின் குடும்பம்<br>❖ பறிக்கப்பட்ட புத்தகம்<br>❖ கல்வியின் மீது தாகம்<br>❖ கல்விச்சுடர் ஏற்றிய வில்சன்<br>❖ முடிவுரை<br>(கதைப்பகுதியை ஒட்டி கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக)<br>(அல்லது) | <br>1/2<br>2<br>2<br>1<br>2<br>1/2 |
| ஆ) | <u>புயலிலே ஒரு தோணி</u><br>❖ முன்னுரை<br>❖ புயலில் சிக்கிய தோணி<br>❖ தோணி படும் பாடு<br>❖ கடலின் வெறிக்கூத்து<br>❖ கரை கண்ட தொங்கான்<br>❖ முடிவுரை<br>(கதைப்பகுதியை ஒட்டி கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக) | <br>1/2<br>2<br>2<br>1<br>2<br>1/2 |
| 45 அ) | <u>அரசுப் பொருட்காட்சி</u><br>❖ முன்னுரை<br>❖ அரசுப்பொருட்காட்சி அமைவிடம்<br>❖ பல்வித அரங்குகள்<br>❖ நடைபெற்ற நிகழ்ச்சிகள்<br>❖ அடைந்த உணர்வுகளும் நன்மைகளும்<br>❖ முடிவுரை<br>( உட்தலைப்புகளின் கீழ் கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக)<br>(அல்லது) | <br>1/2<br>1<br>2<br>2<br>2<br>1/2 |
| ஆ) | <u>கொரோனா பெருந்தொற்று</u><br>• முன்னுரை<br>• கொரோனா பெருந்தொற்று<br>• தடுப்பு நடவடிக்கைகள்<br>• விழிப்புணர்வுச் செயல்பாடுகள்<br>• நமது கடமைகள்<br>• முடிவுரை.<br>( உட்தலைப்புகளின் கீழ் கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக) | <br>1/2<br>1<br>2<br>2<br>2<br>1/2 |

Scanned with CamScanner